என்மீது வேண்டுமென்றே

ஆதாரமில்லாமல் அவதூறு பரப்புகிறார் அண்ணாமலை!

மான நஷ்ட ஈடு வழங்கக்கோரி கழக பொருளாளர் டி.ஆர்.பாலு நீதிமன்றத்தில் வழக்கு!

சென்னை, மே14- அவதூறு குற்றச் சாட்டில் 15 நாளில் மன்னிப்பு கேட்காததால், தமிழ்நாடு பா.ஜ. தலைவர் அண்ணாமலை மீது தி.மு.க. எம்.பி. டி.ஆர். பாலு சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் அவதூறு வழக்கு தொடர்ந்துள்ளார். சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் தமிழ்நாடு பா.ஜ. தலைவர் கே.அண்ணாமலை மீது கழகப் பொருளாளரும் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான டி.ஆர். பாலு தாக்கல் செய்துள்ள அவதூறு வழக்கில் கூறியிருப்பதாவது:-

தமிழ்நாடு பா.ஜ. தலைவர் அண்ணாமலை எந்த சூழ்நிலையிலும் மக்கள் பணிக்காக தேர்வு செய்யப்படவில்லை. அவரால் மக்கள் மன்றத்தில் தேர்வாக முடியாத நிலையில் நாடாளுமன்ற உறுப்பினராக பல முறை தேர்வு செய்யப்பட்டு மக்கள் பணியில் இருக்கும் என் மீது வேண்டுமென்றே அவதூறு செய்திகளை பரப்பி வருகிறார்.

தனிமனித ரகசிய உரிமைக்கெதிரானது!

கடந்த 14ம் தேதி அவர் பா.ஜ. தலைமை அலுவலகத்தில் தொலைக்காட்சிகளுக்கும், சமூக வலைதளங்களுக்கும் பேட்டியளித்து தி.மு.க. பைல்ஸ் என வீடியோவை ஆதாரங்கள் எதுவும் இல்லாமல் வெளியிட்டுள்ளார்.

அந்த வீடியோவில் எனது குடும்பத்தாரின் படங்களையும், எனது மகனான மன்னார்குடி தொகுதி எம்.எல்.ஏ.வுமான அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தொடர்பாகவும் தகவல் வெளியிட்டுள்ளார். இது தனி மனித ரகசிய உரிமைக்கு எதிரானது. தேர்தல் வேட்பு மனுவில் எனது சொத்துக்கள் தொடர்பாக தெளிவாக பதிவிட்டுள்ள நிலையில் பொய்யான குற்றச்சாட்டுகளுடன் ஆதாரமில்லாமல் அரசியல் உள்நோக்கத்துடன் அண்ணாமலை செயல்பட்டுள்ளார். நானும் தொழில்துறை அமைச்சராக இருக்கும் என் மகன் டி.ஆர்.பி. ராஜாவும் மட்டுமே பொது வாழ்வில் உள்ளோம். என் குடும்பத் தைச் சேர்ந்தவர் வேறு ஒருவரும் பொது வாழ்க்கையில் ஈடுபடவில்லை.

தனிப்பட்ட வாழ்க்கைக்கு பங்கம் விளைவிக்கிறது!

நாங்கள் 21 நிறுவனங்களில் பல கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளதாக அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார். ஆனால் அவர் கூறும் நிறுவனங்களில், 3 நிறுவனங்களில் மட்டும் சிறு முதலீடு செய்து உள்ளேன். மற்ற நிறுவனங்கள் பங்குதாரராகவும் இல்லை. பொய்யான குற்றச்சாட்டை கூறி நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியதற்காக அண்ணாமலை எனக்கு மான நஷ்ட ஈடு வழங்க வேண்டும். கடந்த 1957 முதல் அரசியலில் இருந்து வருகிறேன். எம்.பி.யாகவும், ஒன்றிய அமைச்சராகவும் பதவி வகித்துள்ளேன். கட்சியிலும் பல்வேறு பொறுப்புகளை வகித்து வருகிறேன். என் மீது மக்களுக்கு இருக்கும் நன் மதிப்பை சீர்குலைக்கும் வகையில் அண்ணாமலை வீடியோ வெளியிட்டு பேட்டியளித்துள்ளார். இதன் மூலம் எனது தனிப்பட்ட வாழ்க்கைக்கு பங்கம் விளைவிக்க முயன்றுள்ளார்.

இது இந்திய தண்டனை சட்டம் பிரிவு 499 மற்றும் 500ன்கீழ் கிரிமினல் குற்றமாகும். எனவே, இந்த புகாரை விசாரணைக்கு எடுத்து அண்ணாமலைக்கு சம்மன் அனுப்பி இவர் மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவு 499 மற்றும் 500ன் (அவதூறு பரப்புதல்) கீழ் நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட வேண்டும். எனமனுவில் கூறப்பட்டுள்ளது.

சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் டி.ஆர்.பாலு சார்பில் வழக்கறிஞர் ரிச்சர்ட்சன் வில்சன் இந்த மனுவை தாக்கல் செய்தார். மனு 17வது பெருநகர மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் விசாரணைக்காக வரும் 19ம் தேதிக்கு தள்ளிவைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், செஷன்ஸ் நீதிமன்றத்தில் அண்ணாமலை மீது வழக்குத் தொடர்ந்துள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.

அண்ணாமலை சிறை செல்வார்

ஆர்.எஸ்.பாரதி பேட்டி

தி.மு.க. அமைப்புச்செயலாளர் ஆர்.எஸ்.பாரதி நேற்று முன்தினம் அளித்த பேட்டி வருமாறு:-

சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் அண்ணாமலை மீது தி.மு.க. பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி.அவதூறு வழக்கு தொடர்ந்துள்ளார். தி.மு.க.யார் மீதும் பொய் வழக்கு போட்டதில்லை. தி.மு.க. தொடர்ந்த அனைத்து வழக்குகளிலும் வெற்றி பெற்றுள்ளது வரலாறு. ஏற்கனவே கலைஞர் பொருளாளராக இருந்த போது 60 ஆண்டுகளுக்கு முன்னதாகவே நாத்திகம் பத்திரிகை ஆசிரியர் மீது அவதூறு வழக்கு தொடர்ந்து ஓராண்டு சிறை தண்டனை பெற்று தந்தார். அதே போன்று தற்போது தி.மு.க. பொருளாளர் டி.ஆர்.பாலு தொடர்ந்துள்ள வழக்கில் அண்ணாமலை சிறை செல்வார்.

இவ்வாறு ஆர்.எஸ். பாரதி பேட்டியளித்துள்ளார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் - இன்று

மாவட்டக் கழகச் செயலாளர்கள் - தொகுதி பார்வையாளர்கள் காணொலி காட்சி வாயிலாக கலந்தாலோசனைக் கூட்டம்!

தலைமைக் கழக அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்கள் தலைமையில், "மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் தொகுதி பார்வையாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டம்" இன்று (14.05.2023 – ஞாயிற்றுக்கிழமை), காலை 11.00 மணியளவில் காணொலி காட்சி வாயிலாக நடைபெறும்.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் தொகுதி பார்வையாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை18.
நாள்: 12.05.2023

தலைமைக் கழகம்,
தி.மு.க

சென்னை எழிலகத்தில், நேற்று முன்தினம் (12.05.2023) வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் வேளாண்மைத் துறையில் பணிகாலத்தில் உயிரிழந்த பணியாளர்களின் வாரிசு தாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கினார். வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் சி. சமயமூர்த்தி, வேளாண்மை இயக்குநர் அ.அண்ணாதுரை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை இயக்குநர் எஸ். நடராஜன், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் ஆர்.பிருந்தாதேவி, ஆகியோர் உடனிருந்தனர்.

வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள்!

சிறந்த விவசாயிகளுக்கு பரிசுகள்!

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வழங்கினார்!

சென்னை, மே 14- முதலமைச்சர் அவர்கள் உழவர் நலன் காத்திட வேளாண்மைத் துறையினை வேளாண்மை - உழவர் நலத்துறை என பெயர் மாற்றம் செய்து, வேளாண்மைக்கென மூன்று தனி நிதிநிலை அறிக்கைகளை சட்டமன்றத்தில் தாக்கல் செய்திட அனுமதியும் அளித்ததன் பலனாக பல உழவர் நலன் சார்ந்த திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டதால் மாநிலத்தின் உணவு தானிய உற்பத்தி கடந்த 2021-22 மற்றும் 2022-23ஆம் ஆண்டுகளில் முறையே 119.97 இலட்சம் மெட்ரிக் டன் மற்றும் 120.62 இலட்சம் மெட்ரிக் டன் என்ற சாதனை அடையப்பட்டுள்ளது.

இது கடந்த 2014-15-ஆம் ஆண்டுக்குப் பின்னர் அடையப்பட்டுள்ள சாதனை ஆகும். டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடிக்காக மே 24, 2022 அன்று 19 நாட்களுக்கு முன்னரே மேட்டூர் அணை திறக்கப்பட்டதாலும் ஆறு, கால்வாய்கள் முன்கூட்டியே தூர் வாரி தயார் நிலையில் வைத்திருந்தாலும் குறுவை தொகுப்பு திட்ட ரூ.61 கோடிக்கு செயல்படுத்தப்பட்டதாலும் கடந்த 47 ஆண்டுகளில் இல்லாத வரலாற்று சாதனையாக 5.36 இலட்சம் ஏக்கர் குறுவை நெல் சாகுபடி அடையப்பட்டது. பாசன விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றும் விதமாக ஒன்றரை இலட்சம் இலவச மின் இணைப்புகள் விவசாயத்திற்காக வழங்கப்பட்டது.

ஒட்டுமொத்த கிராம ஊராட்சியின் வளர்ச்சியினை கருத்தில் கொண்டு செயல்படுத்தப்பட்டு வரும் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித்திட்டம், குறுவை சிறப்பு தொகுப்பு திட்டம், உயர் விளைச்சல் தரும் ரகங்கள் மற்றும் வீரிய ஒட்டு ரகங்களின் விதைகளை விவசாயிகளுக்கு வழங்கியது, தார்பாலின், ஜிங்க் சல்பேட், ஜிப்சம், உயிர் உரங்கள் மற்றும் வேளாண் உபகரணங்கள் ஆகிய அத்தியாவசிய பொருட்களை மானிய விலையில் வழங்கியது, நெல் தரிசில் பயறு வகை சாகுபடி மற்றும் மாற்றுப் பயிர்களான சிறுதானியங்கள், பயறுவகைகளை ஊக்குவித்தது, ரூ.7858 கோடியில் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியது போன்ற திட்டங்கள் உழவர்களின் வாழ்வில் ஒளியேற்றிவரும் திட்டங்களாகும். கரும்பு சாகுபடி விவசாயி களுக்கு கரும்பு சிறப்பு ஊக்கத் தொகையாக ரூ.331.81 கோடி விவசாயிகள் வங்கி கணக்கில் நேரடியாக வழங்கப்பட்டது.

நடைமுறையில் உள்ள பயிர் காப்பீட்டுத்திட்டத்தில் ஒன்றிய அரசால் புகுத்தப்பட்ட கொள்கை மாற்றங்களால், இத்திட்டம் தொடங்கப்பட்ட 2016-2017 ஆம் ஆண்டை விட 2021-22-ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசின் காப்பீட்டு மானியம் 240 சதவீதம் உயர்ந்தபோதும், விவசாயிகளின் நலனில் அதீத அக்கறை கொண்ட தமிழ்நாடு அரசு இத்திட்டத்தை 2023-2024ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்திட காப்பீட்டு மானியமாக ரூ.2,337 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழ்நாடு அரசின் பெரும் முயற்சியால், 2020-2021-ஆம் ஆண்டிற்கான இழப்பீட்டுத் தொகையாக ரூ.2,572 கோடி 12.79 இலட்சம் விவசாயிகளுக்கும், 2021-2022 ஆம் ஆண்டிற்கு 6.70 இலட்சம் விவசாயிகளுக்கு ரூ.783 கோடியும் வழங்கியுள்ளது. மேலும், 2022-2023 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெருமழையால் பாதிக்கப்பட்ட மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த 29,797 சம்பா நெல் விவசாயிகளுக்கு விதைப்பு பொய்த்தல் இனத்தின் கீழ் ரூ.49.66 கோடியும் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டுள்ளது.

பிரதம மந்திரியின் நுண்ணீர் பாசனதிட்டத்தின் கீழ் 1,61,149 எக்டர் பரப்பில் ரூ.1,138.10 கோடி நிதியில் நுண்ணீர் பாசன அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளது. பாதுகாக்கப்பட்ட சூழலில் தோட்டக்கலைப்பயிர்கள் சாகுபடியினை ஊக்குவிக்க 1404 எக்டர் பரப்பளவில் பசுமைக் குடில், நிழல் வலைகுடில், நிலப் போர்வை ரூ.18.92 கோடி நிதியில் அமைக்கப்பட்டுள்ளது. அறுவடைக்குபின் செய்இழப்புகளை குறைக்க 870 சிப்பம் கட்டும் அறைகள், 2915 குறைந்த செலவிலான வெங்காய சேமிப்பு கிடங்குகள் ரூ.38.75 கோடி நிதியில் அமைக்கப்பட்டுள்ளது. 2693 நடமாடும் விற்பனை வண்டிகள் ரூ.328.35 இலட்சம் நிதியில் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. தரமான பந்தல் வகை காய்கறிகள் உற்பத்தி செய்வதற்கு 837.5 எக்டர் பரப்பில் ரூ.14.19 கோடி நிதியில் நிரந்தர பந்தல் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் மாநில மரமான பனைமர சாகுபடியை ஊக்குவிக்கும் பொருட்டு, 2022-23ம் ஆண்டில் பனை மேம்பாட்டு இயக்கம் ரூ.2.02 கோடி நிதியில் செயல்படுத்தப்பட்டது.

பண்ணை அளவிலான வர்த்தகம்!

2022-2023-ஆம் ஆண்டில் தேசிய வேளாண் சந்தைகளில் ரூ.1112.83 கோடி மதிப்பிலான 26.57 இலட்சம் எண்கள் தேங்காய் மற்றும் 45.47 இலட்சம் குவிண்டால் இதர விளைபொருட்கள் பரிவர்த்தனை செய்யப்பட்டு, 3.23 இலட்சம் விவசாயிகளுக்கு மின்னணு தேசிய வேளாண் சந்தை வலைதளத்தின் வழியாக ரூ.999.07 கோடி பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மின்னணு தேசிய வேளாண் சந்தைகளில் 2022-2023ஆம் ஆண்டில், ரூ 646.04 இலட்சம் மதிப்பிலான 5.37 இலட்சம் எண்கள் தேங்காய் மற்றும் 24250 குவிண்டால் இதர விளைபொருட்கள பண்ணை அளவிலான வர்த்தகம் மூலம் மேற்கொள்ளப்பட்டு விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

இத்தகைய சாதனைகள் அடைவதற்கும் அரசின் திட்டங்களை சிறப்பான முறையில் வேளாண் பெருமக்களுக்கு எடுத்துச் செல்லும் வேளாண்மை - உழவர் நலத்துறையின் பணியாளர்களின் நலன் கருதி, வேளாண்மைஉழவர் நலத்துறையில் பணிபுரிந்து 2019ஆம் ஆண்டு வரை பணிக்காலத்தில் இறந்த பணியாளர்களின் குடும்ப வறுமை நிலையினை போக்கிட 116 பணியாளர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 24.12.2021 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கப்பட்டது. மேலும், தகுதிவாய்ந்த 32 வாரிசுகளுக்கு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் 08.11.2022 அன்று கருணை அடிப்படையில் பணி நியமன ஆணை வழங்கப்பட்டது.

மேலும், வேளாண் தொழில்நுட்ப பணிகளை மேற்கொள்ளவும், விவசாயிகளிடம் அரசின் திட்டங்களை கொண்டு சேர்க்கவும், 2022ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக 162 உதவி வேளாண்மை அலுவலர்களும், 362 வேளாண்மை அலுவலர்களும், 27 உதவி தோட்டக்கலை இயக்குநர்களும், 169 தோட்டக்கலை அலுவலர்களும், 274 உதவி தோட்டக்கலை அலுவலர்களும் தெரிவு செய்யப்பட்டு நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையில் பணிபுரிந்து பணிக்காலத்தில் 2021 வரை இயற்கையெய்திய பணியாளர்களின் 19 வாரிசுகளுக்கு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் இன்று கருணை அடிப்படையில் பணி நியமன ஆணை வழங்கப்பட்டது. இவ்வரசு பொறுப்பேற்றவுடன் 167 இறந்த பணியாளர்களின் வாரிசுகளுக்கு பணி நியமன ஆணை வழங்கியதன் காரணமாக, இறந்த பணியாளர் குடும்பத்தின் வறிய நிலையை போக்கி வாழ்வாதாரம் கிடைப்பதோடு, வேளாண்மைத்துறை பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், இந்நிகழ்வின் போது புதிய உள்ளூர் வேளாண் தொழில்நுட்பம் மற்றும் புதிய இயந்திரம் வடிவமைத்து பயன்படுத்தி வரும் இரண்டு விவசாயிகளுக்கு தலா ரூபாய் ஒரு இலட்ச ரூபாயும் இயற்கை முறையில் தோட்டக்கலைப் பயிர்களை சாகுபடி செய்து வரும் மூன்று விவசாயிகளுக்கு மொத்தமாக ரூபாய் இரண்டு இலட்சமும் வேளாண் பொருட்களை சாகுபடி செய்து ஏற்றுமதி செய்து வரும் விவசாயிக்கு ரூபாய் இரண்டு இலட்சமும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அரசுச் செயலாளர் சி.சமயமூர்த்தி, வேளாண்மை இயக்குநர், ஆ.அண்ணாதுரை, வேளாண் விற்பனை வேளாண் வணிக துறை இயக்குநர் எஸ்.நடராஜன், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர். இரா. பிருந்தாதேவி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அனைத்து நகரங்களையும்

குப்பைகள் இல்லாத நகரங்களாக்குவதே நோக்கம்!

விழிப்புணர்வு குறும்படங்களை வெளியிட்டு அமைச்சர் கே.என்.நேரு பேட்டி!

சென்னை, மே 14- நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு திடக்கழிவு மேலாண்மை குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்ட விழிப்புணர்வு குறும்படங்களை நேற்று (13.05.2023) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் வெளியிட்டார்.

பின்னர் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் நகரங்களை தூய்மையாக்குவதற்கும், குப்பையில்லா நகரங்களை உருவாக்குவதற்கும் 'தூய்மையான மக்கள் இயக்கத்தினை' 03.06.2022 அன்று தொடங்கி வைத்தார்கள். இந்த விழிப்புணர்வு இயக்கத்தின் கீழ் 4 வகையான தலைப்புகளில் ஒவ்வொரு மாதமும் இரண்டாம் மற்றும் நான்காம் சனிக்கிழமைகளில் அனைத்து நகர்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த விழிப்புணர்வு இயக்கத்தை மேலும் மக்களிடம் கொண்டு சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையால் 4 வகையான தலைப்புகளில் தயாரிக்கப்பட்ட விழிப்புணர்வு குறும்படங்கள் வெளியிடப்பட்டுள்ளது. தூய்மை பழக்க வழக்கங்களை நடைமுறைப்படுத்தி அதனை நீடித்து நிலைக்கச் செய்திட தூய்மை இந்தியா திட்டம் (ந) 2.0 தொடங்கப்பட்டது. அனைத்து நகரங்களையும் குப்பைகள் இல்லாத நகரங்களாகவும், திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நகரங்களாகவும் ஆக்குவதே தூய்மை இந்தியா திட்டத்தின் முதன்மையான நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத நகரங்களாக 649 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அனைவருக்கும் கழிப்பறைகளை வழங்குவதன் மூலம், அனைத்து நகர்ப்புறங்களையும் தொடர்ந்து 'திறந்த வெளி மலம் கழிக்காத நகரங்களாக' நீடித்து நிலைக்கச் செய்திட இந்த அரசு உறுதி பூண்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் நகர்ப்புற உள்ளாட்சிகளில் தேவைக்கேற்ப தனி நபர் வீட்டுக் கழிப்பறைகள், சமுதாயக் கழிப்பறைகள், பொது கழிப்பறைகள், திடக்கழிவு மேலாண்மை வசதிகள் மற்றும் பயன்படுத்தப்பட்ட நீர் மேலாண்மை வசதிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட விழிப்புணர்வு குறும்படங்கள்,

1. எனது குப்பை எனது பொறுப்பு - வீடுகளில் இருந்து பெரும் குப்பைகளை தரம் பிரித்து கொடுத்தல் பற்றி மக்களுக்கு எடுத்துரைத்தல். 2. எனது இடம் எனது பொறுப்பு - காலி மனைகளில் குப்பைகளை கொட்டாது இருத்தல் குறித்து விளக்குதல். 3. பாவம் செய்யாதிரு - அடுக்குமாடி குடியிருப்புகளில் இருந்து குப்பைகளை கீழே வீசாமல் இருத்தல். 4. உங்கள் குப்பை உங்கள் பொறுப்பு - பொது இடங்களில் இருக்கும் குப்பைத் தொட்டியை முறையாக பயன்படுத்துவது குறித்து எடுத்துரைத்தல். இது போன்ற பல்வேறு விழிப்புணர்வு விவரங்களை கொண்ட குறும்படங்கள் அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் மக்களை சென்றடையும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இந்நிகழ்வில் சிவ் தாஸ் மீனா, ககன்தீப் சிங் பேடி, பா.பொன்னையா, பி.விஷ்ணுசந்திரன், டி.சிவா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

'வாட்ஸ் அப்' பில் வந்த செய்தி!